**களணி பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களணி பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் களணி பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.15 | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரத்தில் உள்ள பிரதேசம், தாபிக்கப்பட்டுள்ள நாடு மற்றும் மாகாணம் மற்றும் அதன் பிரதான அலுவலகத்தின் முகவரி என்பன வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | தவறு இனங்காணப் பட்டுள்ளதுடன் 2021 இன் இறுதிக் கணக்குகளில் அந்த வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

## 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய 2155/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்டுள்ள மேல் மாகாண பிரதேச சபை நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி இலக்கம் 83(ii) இன் பிரகாரம் ஊழியர் கடனுக்காக முற்பணக் கணக்கொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | தவறு இனங்காணப் பட்டுள்ளதுடன் முற்பணக் கணக்கொன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணக் கணக்கொன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீள்மதிப்பீட்டு பட்டோலையின் பிரகாரம் சபைக்கு சொந்தமாக காணப்பட்ட 96 காணிகளில் 06 பொது குளிக்கும் கிணறுகளுக்குரிய 06 காணிகள் பௌதீக ரீதியில் காணப்படாதிருந்ததுடன் சபைக்கு சொந்தமாக காணப்படும் காணியொன்று நன்கொடை உரித்துறுதி மூலம் வேறொரு நபருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | பிலபிட்டி, வேவல்துவே, மானல்கம, வீடமைப்புத் திட்டத்தில், கண்டி வீதி புழுககசந்தி பொது குளிக்கும் கிணறு மற்றும் வனாத்தவத்த காணி என்பன கையளிக்கப்பட்டுள்ளது. வனவாசல விளையாட்டு மைதானம் காணப்படவில்லை. ஈரியவெட்டிய தேவ சுமித்தாராம வீதி குளிக்கும் கிணறு பௌதீக ரீதியில் காணப்படாமையால் பெறுமதியை தீர்மானிக்க முடியாதிருந்தது. மேவெல்ல சிறுவர் பாடசாலை, பொது நூலகம் மற்றும் சிறுவர் பூங்கா என்பவற்றை மீளமைக்கப்படுவதனால் பெறுமதி தீர்மானிக்க முடியாதிருந்தது. வேவெல்துவ அபய மாவத்தையில் அபய சிறிவத்த அருகில் குளிக்கும் கிணறு மீள்மதிப்பீட்டு காணி பதிவேட்டில் கொரக்கஹவத்த காணி தொடர்பான பகுதியாகும். காணி மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான சகல காணிகளையும் இனங்கண்டு பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதுடன் சபைக்குச் சொந்தமான காணிகள் நன்கொடை உரித்துறுதி மூலம் கையளிக்க முடியுமா என்பது தொடர்பாக கண்டறிந்து அது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடன்கொடுத்தோராக பட்டோலையில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 7,000,000 பெறுமதியான மின்பிறப்பாக்கி இயந்திரமொன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | சொத்துக்கள் யாவற்றையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 08 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையில் காணப்பட்ட வேறுபாடுகள் பட்டோலை மீதியில் சீராக்கி பொது இருப்பு மற்றும் ஒதுக்கீட்டு கணக்கிற்கு மாற்றப்பட்டமையின் காரணமாக ரூபா 109,383,228 இனால் இருப்பு மீதி மாற்றமடைந்திருந்தது. | உரிய விடயத்துடன் அந்த மீதி இணங்காமையை சீராக்கி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த தவறை சரிசெய்யும் வரை புதிய கணக்கு முறைமையின் பிரகாரம் தற்காலிகமாக இருப்பு மற்றும் ஒதுக்கமாக கணக்கு திறக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் மேற்கொள்ளப் படுகின்ற சரிசெய்தல்கள் அந்த இருப்பு மற்றும் ஒதுக்க கணக்கு ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களுக் கும் பட்டோலை களுக்குமிடையே மீதிகளில் வேறுபாடொன்று காணப்பட முடியாதிருந்ததுடன் முறையான அதிகார பலத்துடன் மாத்திரம் இருப்பு கணக்கிற்கு மாற்றுதல் வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டில் கூட்டுமொத்தமாக ரூபா 2,233,236 தொகையான நிலையான சொத்துக்கள் அகற்றப்பட்டிருந்த போதிலும் அதற்கான பெறுமானத்தேய்வாக அகற்றப்பட வேண்டிய ரூபா 254,200 தொகை சீராக்கப்படாமையின் காரணமாக அந்த பெறுமதியால் மிகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பெறுமானத்தேய்வு பெறுமதி அகற்றும் கணக்கிலும், பெறுமானத்தேய்வு ஒதுக்க கணக்கிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | தவறு இனங்காணப் பட்டுள்ளதுடன் அகற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பெறுமானத்தேய்வு ஒதுக்க கணக்கில் உள்ளமையினால் அது 2021 ஆம் ஆண்டின் போது திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படுமென தயவுசெய்து அறியத்தருகின்றோம். | அகற்றப்பட்ட சொத்துக்களுக் குரிய பெறுமானத்தேய்வு ஒதுக்கங்களையும் சரியான பிரகாரம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 197,745,162 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 94,173,429 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 733,489 தொகையான விழா மண்டப வாடகை பெறுமதியில் ஆண்டின் இறுதித் திகதி வரையிலும் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. நடப்பாண்டில் ரூபா 430,000 தொகைக்கு சிட்டையிடப்பட்டிருந்த போதிலும் அந்த சிட்டையிடல்களில் ரூபா 373,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் முதல் கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக வாடகை அறவிடல் மிகவும் குறைந்த மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிலுவை விழா மண்டப வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 637,533 தொகையான ஏனைய நிலைய நிலுவை வாடகைகளில் ஆண்டின் இறுதித் திகதி வரையிலும் எந்தவொரு தொகையும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் முதல் கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக வாடகை அறவிடல் மிகவும் குறைந்த மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஏனைய நிலையங்களின் நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 47,628,734 மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிலுவை ஆதனவரி ரூபா 43,536,497 ஆனமையால் ரூபா 4,092,237 வேறுபாடொன்று காணப்பட்ட போதிலும் ஆதனவரி அலகொன்றில் 04 வருடங்கள் அளவிலான காலம் முதல் அறவிடப்படாதுள்ள ரூபா 787,040 நிலுவையொன்று காணப்பட்டமையும், மீளாய்வாண்டில் | பரீட்சை மீதியில் காணப்பட்டதுடன் நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையினால் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும், ஆதனங்களை தடை செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தது. நீண்ட கால ரீதியில் உரிய நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தமையால் | வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்வதற்கும் நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கும் வருமான சிட்டையிடல்களை சரியாக மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அதிகரித்து சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 118,300,000 ஆக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | தற்போது ஆதனவரி பதிவேட்டில் சிட்டையிடல் நிறுத்தப்பட்டு எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2020 ஆம் ஆண்டின் தகவல்களை பெற்றுக்கொள்ளும் போது சிட்டையிடல்களில் கணக்கீட்டு வழுக்கள் இடம்பெற்றுள்ளது. | |

### 2.2.3 கடை வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபைக்குச் சொந்தமான கடைகளிலிருந்து ரூபா 16,546,626 நிலுவையொன்று காணப்பட்டதுடன் இந்த நிலுவை மீதியில் இரண்டு கடைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 643,245 தொகையான கடை வாடகையொன்று 03 வருடங்கள் அளவிலான காலம் முதல் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று நோயின் பின்னர் நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கடை வாடகை பெறுமதி ரூபா 113,078,355 இற்காக கடை வாடகை பதிவேடு மற்றும் விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் கடை வாடகை மற்றும் இறைச்சிக் கடை வாடகை மீதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 18,741,872 ஆகவும், நேரொத்த அறிக்கையின் பிரகாரம் ரூபா 115,648,294 ஆகவும் காணப்பட்டமையால் ரூபா 96,906,422 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | பரீட்சை மீதியில் காணப்படுகின்றது. பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்வதற்கும், கணக்கீடு செய்யப்பட்ட சகல பெறுமதி களுக்காவும் எழுத்து மூல சான்றுகளை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2.4 ஏனைய வருமானம்**

**தொலைத்தொடர்பு பரிவர்த்தனை கோபுர வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 54 தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்களிலிருந்து அறவிட வேண்டியதாக காணப்பட்ட கோபுர வருமானம் ரூபா 132,000 அறவிடப்படாதிருந்ததுடன் இந்த கோபுரங்களிலிருந்து வருடாந்த மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபை அதிகாரப் பிரதேசத்தில் கோபுரங்களில் மதிப்பீடொன்று 2019 ஆம் ஆண்டின் இறுதி அரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் அதில் எழுபத்தைந்து சதவீத அளவொன்று பூர்த்தி செய்யப்பட்டதுடன் கொவிட் தொற்று நோய் நிலைமையின் பின்னர் மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும். | நிலுவை பரிவர்த்தனை கோபுர வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் புதிய மதிப்பீடு செய்யப்படும்வரை பழைய மதிப்பீட்டிற்கு அல்லது கோபுரங் களிலிருந்து வருடாந்த மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |